செ.கு. எண்: 4 நாள்: 04/01/2012

# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை – 4.1.2012

வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம், வீரந்தாங்கல் கிராமத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு. முனுசாமி என்பவரின் மனைவி திருமதி ரேவதி, அத்தியந்தல் கிராமத்திலுள்ள மருத்துவமனையில் உடல்நலக் குறைவால் காலமானதையடுத்து அவரது உடலை சொந்த ஊருக்கு வேனில் 2.1.2012 அன்று கொண்டு சென்ற போது, திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை கலைக்கல்லூரி அருகில் அவ்வேனின் மீது திருவண்ணாமலையிலிருந்து பெங்களூர் சென்று கொண்டிருந்த அரசுப் பேருந்து மோதியதில் அந்த வேனில் பயணம் செய்த, இறந்து விட்ட ரேவதியின் தந்தை திரு. நாகராஜ் மற்றும் தாய் திருமதி மோகனா ஆகிய இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இவ்விபத்தில் அகால மரணமடைந்த திரு. நாகராஜ் மற்றும் திருமதி மோகனா குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இத்துயரச் சம்பவத்தில் காலமான திரு. நாகராஜ் மற்றும் திருமதி மோகனா ஆகியோரை இழந்து வாடும் அவர்தம் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

*வெளியீடு, இயக்குநர்,*
*செய்தி, மக்கள் தொடர்புத் துறை,*
*சென்னை-9*